கூடுதல் மாவட்ட நீதிமன்றம், தென்காசி

முன்னிலை:– திரு. எஸ். மனோஜ்குமார், எம்.ஏ., எம்.எல்.,
கூடுதல் மாவட்ட நீதிபதி, தென்காசி.

2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 05 ஆம் நாள் வியாழக்கிழமை

**இடைநிலை மனு எண்.3/2023**
அதன்
**அசல் வழக்கு எண்.147/2019**

(CNR No. TNTS-01-000197-2019)

உஷாதேவி ... மனுதாரர்/வாதி

..எதிர்..

1. ஆர்.கிருஷ்ணன்
2. ஆர். ராஜாத்தி
3. வெங்கடேஸ்வரராஜா
4. பார்வதி
5. ஆர்.முஜிப்ரகுமான்
6. இம்மானுவேல் ஜெபகுமார்தாமஸ் ... எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள்

இந்த இடைநிலை மனுவானது கடந்த 24.02.2026 ஆம் தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.ஐ.கே.சுப்பிரமணியன் அவர்களும், 1வது எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.எம்.ஏ.அப்துல்மஜித் அவர்களும், 3வது எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.சண்முகசுந்தரம் அவர்களும் ஆஜராகியுள்ள நிலையில், 2 மற்றும் 4 முதல் 6 எதிர்மனுதாரர்கள் தோன்றாதரப்பார்களாக தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையிலும், மேற்படி முன்னிலையாகியுள்ள வழக்கறிஞர்கள் நிகழ்த்திய வாதுரைகளைக் கேட்டறிந்தும், இரு தரப்பு ஆவணங்களைப் பரிசீலனை செய்தும் இதுநாள்வரை இந்நீதிமன்றப் பரிசீலணையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

<u>உத்தரவு</u>

இந்த மனுவானது உரிமையியல் விசாரணை முறைச் சட்டம் கட்டளை 26 விதி 9 மற்றும் பிரிவு 151–ன் கீழ், தபசில் சொத்துக்களை சர்வேயர் உதவியுடன் அளந்து

வரைபடத்துடன் கூடிய அறிக்கை தாக்கல் செய்ய ஏதுவாக வழக்கறிஞர் ஒருவரை ஆணையராக நியமனம் செய்ய உத்தரவிடக்கோரி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **<u>மனுவின் சுருக்கம்</u>**:–

இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் வாதி ஆவார். அசல் வழக்கானது விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் தென்காசி சார்பு நீதிமன்றத்தில் இந்த நிர் 1, 2 எதிர்மனுதாரர்களுக்கு எதிராக அசல் வழக்கு எண்.139/2011 தாக்கல் செய்து மேற்படி வழக்கானது தள்ளுபடி செய்யப்பட்டதன்பேரில் மேல்முறையீடு வழக்கு எண்.28/2016 தாக்கல் செய்ததில், மேற்படி மேல்முறையீடானது, மனுதாரர் அதே வழக்குமூலத்தில் அனைத்து தரப்பினரையும் கட்சியாக சேர்த்து புதிதாக வழக்கு தாக்கல் செய்ய அனுமதி அளித்து மேல்முறையீடானது தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது. அதன்பேரில் மனுதாரர் இந்த நிர் 3, 4 எதிர்மனுதாரர்களை கட்சி சேர்த்து இந்த அசல் வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுத் தபசில் சொத்திற்கு தெற்கே எதிர்மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்ட இடம் உள்ளதால் தபசில் சொத்துக்களை சர்வேயர் உதவியுடன் அளந்து அறிக்கை தாக்கல் செய்ய வேண்டி வழக்கறிஞர் ஒருவரை நீதிமன்ற ஆணையராக நியமனம் செய்ய வேண்டியது அவசியமானது, எனவே மனுதாரரால் இந்த மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. **<u>3 வது எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்</u>**:–

மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லக் கூடியதல்ல. மனுதாரர் என்ன காரணத்திற்காக ஆணையர் நியமனம் கோரியுள்ளார் என்ற காரணமானது மனு அவிடவிட்டில் குறிப்பிட்டு கூறப்படவில்லை, மனுதாரரின் விருப்பத்திற்காக ஆணையரை நியமிக்க சட்டத்தில் இடமில்லை. எனவே மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்.

4. 2 மற்றும் 4 முதல் 6 எதிர்மனுதாரர்கள் தோன்றாதரப்பார்களாக தீர்மானிக்கப்பட்டுள்ளனர். 3 வது எதிர்மனுதாரர் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்படவில்லை.

5. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவென்றால்

"இம்மனு அனுமதிக்கக் கூடியதா?"

என்பதே ஆகும்.

6. இம்மனுவில் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

7. **<u>பிரச்சனைக்கான தீர்வு</u>**:–

இந்த மனுவின் மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் மனுதாரர் அசல் வழக்கில் வாதி என்றும், அசல் வழக்கானது விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், மனுதாரர் தென்காசி சார்பு நீதிமன்றத்தில் இந்த நிர் 1, 2 எதிர்மனுதாரர்களுக்கு எதிராக அசல் வழக்கு எண்.139/2011 தாக்கல் செய்து மேற்படி வழக்கானது தள்ளுபடி செய்யப்பட்டதன்பேரில் மேல்முறையீடு வழக்கு எண்.28/2016 தாக்கல் செய்ததில், மேற்படி மேல்முறையீடானது, மனுதாரர் அதே வழக்குமூலத்தில் அனைத்து தரப்பினரையும் கட்சியாக சேர்த்து புதிதாக வழக்கு தாக்கல் செய்ய அனுமதி அளித்து மேல்முறையீடானது தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது என்றும், அதன்பேரில் மனுதாரர் இந்த நிர் 3, 4 எதிர்மனுதாரர்களை கட்சி சேர்த்து இந்த அசல் வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், மனுத் தபசில் சொத்திற்கு தெற்கே எதிர்மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்ட இடம் உள்ளதால் தபசில் சொத்துக்களை சர்வேயர் உதவியுடன் அளந்து அறிக்கை தாக்கல் செய்ய வேண்டி வழக்கறிஞர் ஒருவரை நீதிமன்ற ஆணையராக நியமனம் செய்யக்கோரியதில், கடந்த 14.08.2023 ஆம் தேதியன்று ஆணையர் நியமனம் செய்யப்பட்டு ஆணையரும் தபசில் சொத்தை சர்வேயர் உதவியுடன் பார்வையிட்டு அளந்து வரைபடத்துடன் கூடிய அறிக்கை தாக்கல் செய்துள்ளதாகவும், ஆனால் மேற்படி அறிக்கையானது ஸ்தலத்தில் உள்ளவற்றை குறிப்பிட்டு தாக்கல் செய்யாமலும், சர்வேயர் குறிப்பிட்டுள்ள விவரங்களை குறிப்பிடாமலும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், எனவே மேற்படி ஆணையர் அறிக்கையை ரத்து செய்துவிட்டு புதிதாக வேறு ஒரு ஆணையரை நியமனம் செய்து அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிட வேண்டியது அவசியமானது என்றும் வாதிட்டிருக்கிறார்.

8. 3வது எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர், மனுதாரரின் விருப்பத்திற்காக ஆணையரை நியமிக்க சட்டத்தில் இடமில்லை என்று ஆட்சேபணை செய்யப்பட்டது.

9. இரு தரப்பு வாதங்களும் வழக்காவணங்களும் பரிசீலிக்கப்பட்டது. வழக்காவணங்களைப் பரிசீலனை செய்ததில், மனுதாரர் தென்காசி சார்பு நீதிமன்றத்தில் இந்த நிர் 1, 2 எதிர்மனுதாரர்களுக்கு எதிராக அசல் வழக்கு எண்.139/2011 தாக்கல் செய்து மேற்படி வழக்கானது தள்ளுபடி செய்யப்பட்டதன்பேரில் மேல்முறையீடு வழக்கு எண்.28/2016 தாக்கல் செய்ததில், மேற்படி மேல்முறையீடானது, மனுதாரர் அதே வழக்குமூலத்தில் அனைத்து தரப்பினரையும் கட்சியாக சேர்த்து புதிதாக வழக்கு தாக்கல் செய்ய அனுமதி அளித்து மேல்முறையீடானது தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதும், அதன்பேரில் மனுதாரர் இந்த நிர் 3, 4 எதிர்மனுதாரர்களை கட்சி சேர்த்து இந்த அசல் வழக்கினை தாக்கல் செய்துள்ளதும் தெரியவருகிறது. இந்நிலையில் மனுத் தபசில் சொத்திற்கு தெற்கே எதிர்மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்ட இடம் உள்ளதாக மனுதாரர் தரப்பில் குறிப்பிட்டுள்ள காரணத்தால் தபசில் சொத்துக்களை பார்வையிட்டு அளந்து அறிக்கை தாக்கல் செய்வதற்காக நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்யக் கோரியுள்ள மனுதாரரின் கோரிக்கையானது ஏற்றுக்கொள்ளக் கூடியது என்று இந்நீதிமன்றம் கருதிய காரணத்தால் ஏற்கனவே இம்மனுவில் கடந்த 14.08.2023 ஆம் தேதியன்று பிறந்த உத்தரவின்படி ஆணையர் நியமனம் செய்யப்பட்டு, அவர், சர்வேயர் உதவியுடன் தபசில் சொத்தை பார்வையிட்டு அறிக்கையும் தாக்கல் செய்துள்ளார். இந்நிலையில் இந்த மனுதாரர் தரப்பில், ஆணையர் கிரைய ஆவணத்தினை வைத்து அளந்து மனுதாரருக்கு 3.5 செண்ட் இடம் தான் உள்ளது என குறிப்பிட்டிருப்பது தவறானது என்றும், சர்வேயர் மனு 1வது தபசில் சொத்தினை 4 எல்கைகளாக நிர்மானித்து துல்லியமாக மனு 1வது தபசில் சொத்து மனுதாரருக்கு பாத்தியப்பட்ட சொத்தாக அளந்து காட்டியுள்ளதாகவும், ஆனால் ஆணையர் மேற்படி விவரத்தை அறிக்கையில் சொல்லவில்லை என்றும், சர்வேயர் மனுதாரருக்கு பாத்தியப்பட்ட சொத்தின் கிழமேல் (வ) 59 அடி, தென்தலை அடி 60 கிழமேல் (தெ) 55 அடி மேல்தலை 48 அடி 7.03 செண்ட் அளந்து காட்டியதாகவும், ஆணையர் இநத் விவரத்தை அறிக்கையில் சொல்லவில்லை என்றும், சர்வேயர் மனுதாரர் / வாதி

இடத்துக்கு தென்புறம் 1, 2 எதிர்மனுதாரர்களுக்கு பாத்தியப்ட்ட இடம் நான்கு மால்களும் அளந்து நிர்ணயித்து காட்டியுள்ளதாகவும், மேற்படி இடத்தில் வடபகுதி காலியிடமாகவும், தென்பகுதியில் 4 வது எதிர்மனுதாரர் ஆக்கிரமித்து கட்டியுள்ள கட்டிடம் அதில் உள்ள கேட், தென்னை மரம் ஆகியவற்றை ஆணையர் பார்வையிட்டுள்ளதாகவும், அதையும் ஆணையர் குறிப்பிடவில்லை என்றும், 3, 4 எதிர்மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்ட கட்டிடத்தையும் சர்வேயர் அளந்து ஆணையரிடம் காட்டியதாகவும், ஆனால் ஆணையர் மேற்படி விவரங்கள் எதனையும் அவரது அறிக்கையில் குறிப்பிடாமல் வில்லங்கச் சான்றிதழில கண்ட சொத்து விவரத்தை வைத்து அறிக்கை தாக்கல் செய்துள்ளதாகவும், ஆணையர் அறிக்கைக்கு ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டுள்ளது.

10. ஆணையர் அறிக்கை மற்றும் சர்வேயர் வரைபடம் ஆகியவற்றை பரிசீலனை செய்ததில், சர்வேயர் அளவை குறித்து ஆணையர் அவரது அறிக்கையில் குறிப்பிட்டிருந்தாலும், வில்லங்கச் சான்றின் அடிப்படையில் அவரது அறிக்கையை தயாரித்துள்ளதாக மனுதாரரின் ஆட்சேபணையில் முன்வைக்கப்பட்டுள்ள வாதமானது ஏற்கக் கூடியதாகவே உள்ளது. எனவே இந்த நிலையில், இந்த வழக்கின் தன்மையை கருத்தில்கொண்டு மனுதாரர் கோரியவாறு இம்மனுவில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆணையர் அறிக்கையை பயனற்றதென தீர்மானித்துவிட்டு, புதிதாக வழக்கறிஞர் ஒருவரை ஆணையராக நியமனம் செய்து அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிடுவது தான் நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து அவ்வாறே பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

முடிவாக வழக்கறிஞர் திரு. பி.முருகேசன் அவர்கள் புதிய நீதிமன்ற ஆணையராக நியமிக்கப்படுகிறார். அவரது ஊதியம் ரூ.15,000/– என நிர்ணயிக்கப்படுகிறது. மேற்படி தொகையை மனுதாரர் ஆணையருக்கு நேரில் செலுத்த வேண்டுமென்றும், ஆணையர் இரு தரப்பினருக்கும் தக்க முன்னறிவிப்பு கொடுத்து தபசில் சொத்தின் இருப்பு மற்றும் தன்மை ஆகியவற்றை சர்வேயர் உதவியுடன் பார்வையிட்டு அளந்து அறிக்கையுடன் கூடிய வரைபடத்தை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது. ஏற்கனவே கடந்த 29.07.2025 ஆம் தேதியன்று இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள

ஆணையர் அறிக்கையானது பயனற்றதென தீர்மானிக்கப்படுகிறது. ஆணையர் ஊதியம் செலுத்திட வாய்தா 12.03.2026.

இந்த உத்தரவானது சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைதிருத்தப்பட்டு, 2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 05 ஆம் நாளான இன்று அவையறியப் பகரப்பட்டது.

MANOJKUMAR S Digitally signed by MANOJKUMAR S Date: 2026.03.06 13:09:22 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி,
தென்காசி

**மனுதாரர், எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்**
இல்லை

MANOJKUMAR S Digitally signed by MANOJKUMAR S Date: 2026.03.06 13:09:32 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி,
தென்காசி

---

கூடுதல் மாவட்ட நீதிமன்றம், தென்காசி
இடைநிலை மனு எண்.3/2023
அதன்
அசல் வழக்கு எண்.147/2019
உத்தரவு (நேரிய)
நாள்: 05.03.2026

---